©
தமிழ்நாடு அரசு
2023

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 1.60 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 5] சென்னை, புதன்கிழமை, பிப்ரவரி 1, 2023
தை 18, சுபகிருது, திருவள்ளுவர் ஆண்டு–2054

## பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை**

**அறிவிக்கைகள்**

*[அரசாணை (நிலை) எண். 181, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி [UD4–(2)]த் துறை, 20 அக்டோபர் 2022.]*

தமிழ்நாடு 1971ஆம் ஆண்டு நகர் ஊரமைப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 10ஆம் பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், பின்வரும் கிராமங்களை தென்காசி உள்ளூர் திட்டமிடல் பகுதியில் சேர்ப்பதுடன், 17.04.1974ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II–பிரிவு 2 இல் 220 ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிருவாகத் துறையின் II(2)/RUL/2152/74ஆம் எண் அறிவிக்கையில் பின்வரும் திருத்தத்தை இதனால் மேற்கொள்கிறார். மேலும், இந்நோக்கம் மேற்சொன்ன சட்டத்தின் 10ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரப்பட்டவாறு, முன்னரே வெளியிடப்பட்டுள்ளது.

**திருத்தம்**

மேற்சொன்ன அறிவிக்கையில் உள்ள அட்டவணைக்குப் பதிலாக, பின்வரும் அட்டவணை சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். அதாவது:–

**"அட்டவணை.**

| *தொடர் எண்.* | *உள்ளூர் திட்டமிடல் பகுதியின் பெயர்* | *வருவாய் கிராமங்களின் எண் மற்றும் பெயர்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1. | தென்காசி | ***நகராட்சி***<br>***தென்காசி***<br>***தென்காசி வட்டம்***<br>**1. குத்துக்கல் வலசை**<br>**6. பாட்டப்பத்து**<br>**11. குணராம நல்லூர்**<br>**7. மின்னடிசேரி**<br>**8. ஆயிரப்பேரி**<br>**9. மத்தளம்பாறை**<br>**13. பாட்டாகுறிச்சி** |

| தொடர் எண். | உள்ளூர் திட்டமிடல் பகுதியின் பெயர் | வருவாய் கிராமங்களின் எண் மற்றும் பெயர் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | *கடையநல்லூர் வட்டம்*<br>28. கொடிக்குறிச்சி<br>*செங்கோட்டை வட்டம்*<br>15. குன்னக்குடி<br>*பேரூராட்சி:*<br>இலஞ்சி<br>மேலகரம்<br>ஆய்க்குடி." |

*[அரசாணை (நிலை) எண். 185, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி [UD4–(2)]த் துறை, 25 அக்டோபர் 2022.]*

தமிழ்நாடு 1971ஆம் ஆண்டு நகர் ஊரமைப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 10ஆம் பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் 8.12.2010 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II–பிரிவு 2 இல் 835 மற்றும் 836 ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறையின் II(2)/HOU/723/2010 ஆம் எண் அறிவிக்கையில், உள்ளூர் திட்டமிடல் பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ள கள்ளக்குறிச்சி, ஏமப்பேர் ஆகிய வருவாய் கிராமங்களை உள்ளடக்கிய கள்ளக்குறிச்சி உள்ளூர் திட்டமிடல் பகுதியில் பின்வரும் வருவாய் கிராமங்களை இதனால் சேர்க்கிறார். மேலும், இந்நோக்கம் மேற்சொன்ன சட்டத்தின் 10ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரப்பட்டுள்ளவாறு முன்னரே வெளியிடப்பட்டுள்ளது:—

"வருவாய் கிராமங்களின் எண் மற்றும் பெயர்

| | |
|---|---|
| 1. நல்லாத்தூர் | 39. பங்காரம் |
| 2. மட்டிகைக்குறிச்சி | 40. நமச்சிவாயபுரம் |
| 3. சடையம்பட்டு | 43. இந்திலி |
| 4. குதிரைச்சந்தல் | 47. பொற்படாக்குறிச்சி |
| 5. காரனூர் | 119. ஆலத்தூர் |
| 8. கா. மாமனந்தல் | 120. திருக்கானங்கூர் |
| 9. சிறுவங்கூர் | 121 பொம்பரபட்டு |
| 10. பெருவங்கூர் | 122 செம்படாகுறிச்சி |
| 11. நீலமங்கலம் | 123 கா. அலம்பாலம் |
| 12. தென்கீரனூர் | 124 மோகூர் |
| 13. நிறைமதி | 125 சோமண்டார்குடி |
| 14. மாடூர் | 126 மோ. வண்ணஞ்சூர் |
| 15. வீரசோழபுரம் (கி) ம (மே) | 127 அரியபெருமனூர் |
| 16. பிரித்விமங்கலம் | 128 வாணியந்தல் |
| 32. மடம் | 129 தண்டலை |
| 33. முடியனூர் | 130 அணைக்கரைக்கோட்டாலம் |
| 34. குரூர் (வ) ம (தெ) | 131 அகரக்கோட்டாலம் |
| 35. மலைகோட்டாலம் | 132 சூளாங்குறிச்சி |
| 36. விளம்பார் | 135 பள்ளிப்பட்டு |
| 37. தச்சூர் | 136 வேலாநந்தல் |
| 39. உலகங்காத்தான் | 137 பள்ளகச்சேரி |

**ஹிதேஸ் குமார் எஸ். மக்வானா,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர் (மு.கூ.பொ),*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

## தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை

*[அரசாணை (2ப) எண். 114, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (J1)த் துறை, 13 டிசம்பர் 2022]*

1948ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும் 5–ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 9–1–2019ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II, பிரிவு–2 இல் 31–32 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் II(2)/LE/26/2019ஆம் எண் அறிவிக்கையை இரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும் தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர், தமிழ்நாடு மாநிலத்தில் ஆட்டோ ரிக்ஷாக்கள் மற்றும் சீருந்து ஓட்டும் பணிகளில் ஈடுபட்டுள்ள, கீழேயுள்ள விவர அட்டவணையின் (1) ஆம் நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வகைகளைச் சேர்ந்த பணியாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறாக இதனால் திருத்தியமைக்கிறார். இதன் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு, ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

(2) இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளன்றும், அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

### விவர அட்டவணை

### ஆட்டோ ரிக்ஷாக்கள் மற்றும் சீருந்துகளில் வேலைவாய்ப்பு

| *பணியாளர் வகைகள்* | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (ரூ. காசு.)* |
|---|---|
| *(1)* | *(2)* |
| ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்கள் (மீட்டர் பொருத்தப்பட்டவை) | நாளொன்றுக்கு 443.00 (அல்லது) மாதமொன்றுக்கு 11500.00 |
| சீருந்து ஓட்டுநர்கள் (மீட்டர் பொருத்தப்பட்டவை) | நாளொன்றுக்கு 503.00 (அல்லது) மாதமொன்றுக்கு 13044.00 |

**விளக்கங்கள்:—(1) அகவிலைப்படி:** மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்களுடன் பணியாளர்களுக்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

*(i)* அகவிலைப்படியானது, 2010 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது. (அதாவது 2001 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகள்) 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் திங்களொன்றுக்கு ரூ.71.40 (எழுபத்தி ஒன்று ரூபாய் நாற்பது காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

*(ii)* முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) நுகர்வோர் சராசரி விலைக்குறியீடுகளை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளன்று அகவிலைப்படி கணக்கிடப்பட வேண்டும்.

*(iii)* முந்தைய ஆண்டிற்கான நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்ட முதல் கணக்கீடு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(2) (i) அன்றாட குறைந்தளவு ஊதிய வீதங்களில், வாராந்திர விடுமுறை ஊதியங்களும் அடங்கும்.

(ii) அகவிலைப்படியின் அன்றாட வீதத்தைக் கணக்கிடுவதற்கு அகவிலைப்படியின் மாதாந்திர வீதங்களை 26 ஆல் வகுக்க வேண்டும்.

(3) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்கின்ற இடங்களிலெல்லாம் தற்போதுள்ள ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**முகமது நசிமுத்தீன்,**
*அரசு கூடுதல் தலைமைச் **செயலாளர்.***

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர் (மு.கூ.பொ),*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.